20-03-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 01.03.1989

பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் - தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீக பார்வை.

இன்று தெய்வீக புத்தியை உருவாக்கக்கூடிய மற்றும் ஆன்மீக பார்வையின் வள்ளலான பாப்தாதா நாலா பக்கத்திலும் தெய்வீக புத்தியை அடையக்கூடிய குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண குழந்தைகளும் இந்த இரண்டு வரதானங்களை பிறவி யிலிருந்தே பெற்றுவிட்டனர். தெய்வீக புத்தி மற்றும் ஆன்மீக பார்வை - இவை பிறப்புரிமை யாக அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. இந்த வரதான் பிராமண வாழ்க்கையின் ஆஸ்திவார மாக இருக்கிறது. வாழ்க்கையில் மாற்றம் மற்றும் மறுபிறவி வாழ்க்கை, பிராமண வாழ்க்கை இந்த இரண்டு பிராப்திகளையும் சொல்லப்படுகிறது. வாழ்க்கை (லௌகீக) மற்றும் நிகழ்கால பிராமண வாழ்க்கை - இரண்டிற்குள்ளும் இந்த இரண்டு விஷயங்களின் சிறப்பு இருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களின் மீதும் சங்கமயுகத்தின் முயற்சிக்கான நம்பரை பெற வேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் சதா ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தைகளிலும், செய லிலும் யார் எவ்வளவு பயன்படுத்துகிறார்களோ, அவ்வளவுதான் நம்பர் முன்னால் பெறுகிறார் கள். ஆன்மீக திருஷ்டி, பார்வையின் மூலம் உள்ளுணர்வு, செயல் தானாகவே மாறிவிடுகிறது. தெய்வீக புத்தியின் மூலம் தனக்காகவும், சேவைக்காக பிராமண குடும்பத்தின் சம்மந்தம் தொடர்புக்காக எப்பொழுதும் தானாகவே ஒவ்வொரு விஷயத்திற்காகவும் சரியான முடிவு எடுக்க முடியும். மேலும் எங்கு தெய்வீக புத்தியின் மூலம் சரியான தீர்வை (முடிவு) செய்கிறார் கள் என்றால் முடிவின் ஆதாரத்தில் தான் தனக்கும், சேவை, சம்மந்தம் - தொடர்பு யதார்த்தமாக சக்திசாலியாகிவிடும். தெய்வீக புத்தி மற்றும் தெய்வீக புத்தி என்பது தான் முக்கியமான விஷயமாகும்.

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளின் தெய்வீக புத்தியை சோதனை செய்துக் கொண்டி ருந்தார். அனைத்தையும் விட தெய்வீக புத்தியின் சோதனை - அவர்கள் சதா பாபாவை, தன்னை (உங்களை) மற்றும் ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களை யாராக இருக்கிறார்களோ, எப்படி இருக்கிறார்களோ, அதை அப்படியே தெரிந்துக் கொண்டு அதன் அடிப்படையில் பாபா விடமிருந்து எந்தளவு பெற வேண்டுமோ, அந்தளவு உரிமையை சதா அடைந்துக் கொண்டே யிருப்பார்கள். யாரை பாபா உருவாக்கியிருக்கிறாரோ, சேவைக்காக நிமித்தமாக வைத்திருக் கிறார், அதை பிராமண வாழ்க்கையின் விசேஷத்தன்மைகளாக மற்றும் தெய்வீக குணங்களாக கொடுத்திருக்கிறார். எதற்காக நிமித்தமாக ஆக்கியிருக்கிறாரோ, அதுபோல தன்னை தானே அதன் படி தன்னை முன்னேற்றுகிறது. மேலும் ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களுடன், யார் என்ன விசேஷத்தன்மையுடைவர்களாக இருக்கிறார்களோ, எந்த குணங்களையுடைவர்களாக இருக்கிறார்களோ, எந்த சேவைக்கு தகுதியுடையவர்களாக இருக்கிறார்களோ, முயற்சியின் வேகம் எப்படியிருக்கிறதோ, ஒவ்வொருவரும் யாராக இருக்கிறார்களோ, எப்படி இருக்கிறார் களோ, அதை தெரிந்துக் கொண்டு அந்த ஆத்மாவிடம், அதன்

அடிப்படையில் தொடர்பில் வருவது மற்றும் முன்னேற்றுவது - இதைத் தான் பாபாவை, தன்னை (சுயத்தை) மற்றும் பிராமண ஆத்மாக்கள் யாராக இருக்கிறார்களோ, எப்படி இருக்கிறார்களோ, அதை தெரிந்துக் கொண்டு முன்னேற்ற வேண்டும் என்று சொல்லப் படுகிறது. இது தெய்வீக புத்தியின் முதன்மையான பகுத்தறிவதாகும்.

தெய்வீக புத்தி என்றால் அன்ன பறவையின் புத்தியாகும். புனிதம் என்றால் சுத்தத்தன்மை, பால் மற்றும் தண்ணீரையும், முத்து மற்றும் கல்லையும் தெரிந்துக் கொண்டு முத்தை தேர்ந்தெடுப் பவர்கள். இது கூழாங்கல் என்றும், இது முத்து என்றும் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் கூழாங் கல்லை தாரணை செய்வதில்லை. ஆகையால் புனிதமான அன்னபறவை சங்கமயுகத்தில் ஞான சொரூபமான வித்யா தேவி சரஸ்வதியின் வாகனமாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஞான சொரூபமாக இருக்கிறீர்கள், ஆகையால் கல்விக்கு அரசன் அல்லது கல்வியின் தேவியாக இருக்கிறீர்கள். இந்த வாகனம் தெய்வீக புத்தியின் அடையாளமாக இருக்கிறது. பிராமணர் களாகிய நீங்கள் அனைவரும் புத்தியின் நினைவு மூலம் மூன்று உலகங்களையும் வலம் (உலா) வந்துக் கொண்டிருக்கிறீர்கள். புத்தியையும் வாகனம் என்று சொல்கிறார்கள். தெய்வீக புத்தி என்ற வாகனம் அனைத்து வாகனங்களையும் விட மிகவேகமானதாகும். தெய்வீக புத்தியை புத்தியின் பலம் (சக்தி) என்றும் சொல்கிறார்கள். ஏனெனில் புத்தி பலத்தின் மூலம் தான் பாபாவிடமிருந்து அனைத்து சக்திகளையும் பெற முடியும். ஆகையால் எப்படி விஞ்ஞானத்தின் சக்தியையும். புத்தியின் பலம் என்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானத்தின் பலம் எவ்வளவு எல்லைக்குட்பட்ட அதிசயத்தை காட்டுகிறது. பல விஷயங்கள் இன்றைய மனிதர்களுக்கு அசம்பவமாக இருக்கிறது, அதை சம்பவமாக செய்து காட்டுகிறது. ஆனால் இவை (விஞ்ஞானம்) அழிவின் பலமாகும். விஞ்ஞானமும் புத்தியின் பலமாக இருக்கிறது, ஆனால் தெய்வீகமான புத்தியின் பலமாக இல்லை. உலகிய புத்தியாக இருக்கிறது. ஆகையால் இந்த உலகத்திற்காக, இயற்கைக்காக தான் யோசிக்க முடியும். மேலும் செய்யவும் முடியும். தெய்வீக புத்தியின் சக்தியானது மாஸ்டர் சர்வசக்திவானாக மாற்றுகிறது. பரமாத்மாவை பற்றிய அறிமுகம், பரமாத்மாவை சந்திப்பது, பரமாத்மாவிடமிருந்து பிராப்திகளை அனுபவம் செய்ய வைப்பதாகும். தெய்வீக புத்தி, என்ன விரும்புகிறோமோ, எப்படி விரும்புகிறோமோ, அசம்பவத்தையும் சம்பவமாக செய்யக்கூடியதாகும். தெய்வீக புத்தியின் மூலம் ஒவ்வொரு காரியத்திலும் பரமாத்மாவின் தூய்மையை அனுபவம் செய்து, ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அனுபவம் செய்ய வைக்க முடியும். தெய்வீக புத்தி எப்படிபட்ட மாயாவின் போரிலும் தோல்வியடைய செய்ய வைக்க முடியும். எங்கு பரமாத்மாவின் டச்சிங் (உணர்வு) இருக்கிறதோ, தூய்மையான தொடர்பு இருக்கிறதோ, கலப்படம் இல்லாமல் இருக்கிறதோ, அங்கு மாயாவின் தொடர்பு அதாவது போர் செய்வது முடியாததாகும். மாயா வருவது என்ன, தொடக் கூட முடியாது. மாயா தெய்வீக புத்திக்கு முன்னால் வெற்றியின் ஆசீர்வாத மாலையாக மாறி விடுகிறது. மாயாவாக இருக்காது. துவாபர்யுகத்தின் இரஜோ குணத்தின் ரிஷி-முனியாக இருக்கும் ஆத்மாக்கள் சிங்கத்தையும் கூட தனது சக்தியின் மூலம் அமைதிப்படுத்தி விடுகிறார் கள் அல்லவா. சிங்கமும் கூட நண்பனாக ஆக்விடுகிறது. வாகனம் ஆகிவிடுகிறது. பொம்மை ஆகிவிடுகிறது, மாற்றம் அடைந்துவிடுகிறது அல்லவா. எனவே சதோபிரதானமான, மாஸ்டர்

சர்வசக்திவானான, தெய்வீக புத்தியுடைய - வரதானமளிக்கும் உங்களுக்கு முன்னால் எதிரியாக இருப்பதிலிருந்து மாற்றம் செய்து விட முடியாதா என்ன? தெய்வீக புத்தி என்பது மிக உயர்ந்த பலமாக இருக்கிறது. இதை மட்டும் பயன் படுத்துங்கள். நேரத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்தினால் அனைத்து வெற்றிகளும் உங்களின் கைகளுக்குள் இருக்கும். வெற்றி என்பது பெரிய விஷயமில்லை, தெய்வீக புத்தியின் தூய்மை (தெளிவு) தான் தேவை. இன்றைய காலத்தின் மாய வித்தை செய்பவர்கள் கைகளில் வித்தையை காட்டுகிறார்கள் அல்லவா. அந்த தெய்வீக புத்தியின் சுத்தம் (தூய்மை) அனைத்து வெற்றிகளையும் கைகளுக்குள் கொண்டு வந்துவிடுகிறது. பிராமண ஆத்மாக்களாகிய உங்கள் அனைவருக்கும் அனைத்து வெற்றிகளும் கிடைக்கிறது. ஆனால் தெய்வீக வெற்றிகள் என்பது சாதாரணமானவை அல்ல. அதனால் தான் உங்களின் மூர்த்தி (சிலை) - யின் மூலம் இன்றுவரையும் பக்தர்கள் வெற்றியை அடைவதற் காக சென்றுக் கொண்டிருக்கிறார்கள். வெற்றி சொரூபமாக ஆகிவிடும் பொழுது பக்தர்கள் உங்களிடம் யாசிக்க வருகிறார்கள். எனவே தெய்வீக புத்தியின் அதிசயத்தை புரிந்துக் கொண்டீர்களா! தெய்வீக புத்தியின் அதிசயம் தெளிவாகிவிட்டதல்லவா. ஆனால் இன்று என்ன பார்த்தார்? என்ன பார்த்திருப்பார் - டீச்சர்ஸ் சொல்லுங்கள்.

ஆசிரியர்கள் பாபாவை போல மாஸ்டர் ஆசிரியர்களாக இருக்கிறீர்கள் அல்லவா. டீச்சர் என்றால் ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் ஒவ்வொரு நொடியும் சேவையிலும் தயாராக இருப்பது. அப்படிபட்ட சேவாதாரிகளைத் தான் பாப்தாதா ஆசிரியர் என்று சொல்கிறார். ஒவ்வொரு நேரமும் வார்த்தைகளின் மூலம் சேவை செய்ய முடியாது. களைப்படைந்து விடுவீர்கள். ஆனால் தனது தோற்றத்தின் மூலம் எப்பொழுதும் சேவை செய்யுங்கள். இதில் களைப்பிற்கான விஷயமே இல்லை. இதை செய்ய முடியும் அல்லவா. ஆசிரியர்கள் வார்த்தை களின் சேவையை சக்திக்கேற்ப சமயத்திற்கு ஏற்றவாறு செய்கிறார்கள், ஆனால் ஃபரிஸ்தா எதிர்காலத்தின் தோற்றமாகும். சங்கமயுகத்தின் எதிர்காலம் தான் ஃபரிஸ்தாவாகும். அது தோற்றத்தில் தென்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஜட சித்திரத்தின் (தேவதைகளின் சிலை) மூலம் கடைசி பிறவி வரை சேவை செய்துக் கொண்டிருக் கிறது, எனவே சைதன்ய சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் தனது தோற்றத்தின் மூலம் சேவையை எளிதாக செய்ய முடியும். உங்களின் தோற்றத்தில் சதா சுகத்தின், அமைதியின், குஷியின் ஜொலிப்பு இருக்கிறது. எப்படிப்பட்ட துக்கமான, அசாந்தியான ஆத்மாக்கள், குழப்பமான ஆத்மாக்கள், உங்களின் தோற்றத்தின் மூலம் தனது சிரேஷ்ட எதிர்காலத்தை உருவாக்க முடியும். அப்படிப்பட்ட அனுபவம் இருக்கிறது அல்லவா. அமிர்தவேளை தனது தோற்றத்தை சோதனை செய்யுங்கள். உடலின் அம்சங்களையும் சோதனை செய்வதை போன்று ஃபரிஸ்தா வின் தோற்றத்தில் குஷியின், அமைதியின், சுகத்தின் அலங்காரம் சரியாக இருக்கிறதா - இதை சோதனை செய்தீர்கள் என்றால் தானாக மற்றும் எளிதாக சேவை நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். ஆசிரியர்களுக்கு இது எளிதாக இருக்கிறதல்லவா? இந்த சேவையை 12 மணி நேரமும் செய்ய முடியும். வார்ததைகளின் சேவை இரண்டு-மூன்று மணி நேரம் தான் செய்ய முடியும். திட்டம் தீட்டுவதற்கான வேலை, சொற்பொழிவு செய்வதற்கான சேவையில் களைப்படைந்து விடுகிறீர்கள். இதிலோ களைப்படைவதற்கான விஷயமே இல்லை. இயல்பாகவே இருக்கும் அல்லவா. அனைவரும்

அனுபவசாலிகளாக இருக்கிறீர்கள், ஆனால் வெளிநாட்டவர்கள் நாய் மற்றும் பூனைகளை அதிகமாக வளர்க்கிறார்கள், அதுபோன்ற பொம்மைகளை கொண்டு வரு கிறார்கள். எனவே மிக நன்றாக அனுபவம் செய்கிறார்கள் ஆனால் எப்பொழுதாவது நாய் வந்து விடுகிறது, அவ்வபொழுது பூனை வந்து விடுகிறது. அதை விரட்டுவதில் அதிகமான சமயம் எடுத்துக் கொள்கிறது. ஆனால் மாயா உங்களின் கழுத்து மாலையாக மாறிவிடும் என்று இன்று சொல்லப்படுகிறதல்லவா. அனைத்து நிமித்த சேவாதாரி களின் கழுத்தில் மாலை போடப் பட்டிருக்கிறது. வெற்றியின் மாலை இருக்கிறது, அல்லது அவ்வப்பொழுது கழுத்தில் மாலை இருப்பதே தெரியாமல் இருக்கிறதா? அதனால் வெற்றியின் மாலையை வெளியில் தேடிக் கொண்டிருக்கிறோம். ராணியின் கதையை கேட்டு இருக்கிறீர்கள் அல்லவா. கழுத்தில் மாலை இருக்கும் பொழுதே தேடிக்கொண்டேயிருந்தார். அவ்வாறு செய்யக்கூடாது அல்லவா. வெற்றி என்பது ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களின் உரிமையாக இருக்கிறது. அனைத்து ஆசிரியர் களும் வெற்றியின் மூர்த்திகளாக இருக்கிறீர்கள் அல்லவா. அல்லது முயற்சி செய்யும் மூர்த்தி, கடினமாக உழைக்கும் மூர்த்தியாக இருக்கிறீர்களா? முயற்சி செய்வது கூட எளிதாக முயற்சி செய்பவர், கடுமையாக செய்பவர் அல்ல. யதார்த்தமான (உணமையான) முயற்சியின் வரையறை இயல்பாக கவனம் வைப்பதாகும். பலர் சொல்கிறார்கள் - கவனம் வைக்க வேண்டும் அல்லவா. ஆனால் கவனம் என்பது டென்சனாக மாறிவிடுகிறது. இது தெரிவ தில்லை. இயல்பான கவனம் என்பது உண்மையான முயற்சியாகும்.

ஆசிரியர்களின் மீது பாப்தாதாவிற்கு அன்பு இருக்கிறது. ஆகையால் முயற்சி செய்ய விடுவதில்லை. மனதினுடைய அன்பு இது தான் அல்லவா. நல்லது, மேலும் என்னென்ன பார்த்தேன் என்று பிறகு இரண்டாவது முறை சொல்கிறேன், கொஞ்சம் கொஞ்சமாக சொல் கிறேன். அனைவருக்குள்ளும் அவரவர்களுக்குள்ளும் தனது உருவம் வந்துக் கொண்டிருக் கிறது.

உள்நாடு வெளிநாடுகளில் சேவை மிகவும் விமரிசையாக நன்றாக நடந்துக் கொண்டிருக்கிறது. பாரதத்தில் கான்ப்ரேன்ஸ் (மாநாடு) மிகவும் நன்றாக வெற்றியடைந்தது. வெற்றியின் அடையாளம் - வெற்றியின் நறுமணத் திற்குள் வரக்கூடிய ஆத்மாக்கள் தனது ஊக்க-உற்சாகத் தில் எண்ணிக்கையும் அதிகரித்துவிடுகிறது. பார்க்க வேண்டும், கேட்க வேண்டும் என்ற ஆவல் ஒவ்வொருவரிடமும் அதிகரித்து வருவது தான் நன்மையின் அடையாளமாகும். இது நல்ல அறிகுறி. ஆகையால் இப்படி சிந்தனை செய்யாதீர்கள் - எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஒருவேளை நல்லது செய்தீர்கள் என்றால் ஆசை அதிகரிக்கும், எண்ணிக்கையோ அதிகரிக்கும். வெளிநாடுகளில் நடைபெறும் ரீட்ரிட்டாக இருந்தாலும், மாநாடாக இருந்தாலும் - இரண்டின் முடிவுகளில் ஒவ்வொரு நாளும் நல்ல முன்னேற்றம் தென்பட்டுக் கொண்டேயிருக்கிறது. பிரம்மா குமாரிகள் பெயரில் யாரும் வரமாட்டார்கள் என்று வெளிநாட்டை சேர்ந்தவர்கள் சொல்லி இருந்தார்கள், இப்பொழுது நேரடியாகவே ஆசிரமத்திற்கு ரீட்ரிட்டிற்காக வருகிறார்கள், இராஜயோகம் கற்றுக் கொள்வதற்கு செல்கிறார்கள், புரிந்திருக்கிறார்கள் என்பது அனைத்தை யும் விட நல்ல ரிசல்ட்டாக (முடிவாக) இருக்கிறதல்லவா. எனவே இப்பொழுது திரைக்கு வெளியே வந்து, திரை திறந்துவிடுகிறது. மதுபனை சேர்ந்தவரகள்,

மற்றும் நாலா பக்கத்திலு முள்ள சேவாதாரிகள் அன்போடு, விஷயங்களை பார்க்காமல், ஒய்வை கருத்தில் கொள்ளாமல், நல்ல முறையில் களைப்பற்ற சேவை செய்தீர்கள். ஆகையால் பாப்தாதா நாலாபக்கங் களிலிருக்கும் களைப்பற்ற சேவையின் வெற்றியை அடையக்கூடிய விசேஷ குழந்தைகளுக்கு சேவையின் வாழ்த்துக்கள், இதயபூர்வமாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டே யிருக்கிறார். இந்த சப்தம் நாலாபக்கத்திலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. நல்லது.

அனைத்து தெய்வீக புத்தியுடைய ஆன்மீக வரமளிக்கும் ஆத்மாக்கள், சதா புத்தியின் பலத்தை நேரத்திற்கு ஏற்றப்படி, செயலுக்கு தகுந்தாற்போல் பயன்படுத்தக்கூடிய ஞான சொரூபமான ஆத்மாக்களை, சதா தனது ஃபரிஸ்தா தோற்றத்தின் மூலம் அகண்ட (துண்டிக்கப்படாத) சேவை செய்யக்கூடிய இயல்பான எளிதாக முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

இரட்டை அயல்நாட்டை சேர்ந்த சகோதர - சகோதரிகளை தனித்தனியான குரூப்பை சேர்ந்தவர்களோடு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு

1. அனைவரும் தனது சிரேஷ்ட பாக்கியத்தை பார்த்து புன்முறுவல் செய்துக் கொண்டிருக் கிறீர்களா? எத்தனை பேர் வந்தாலும் உங்களின் பாக்கியம் (விதி) எப்பொழுதும் இருக்கும். நீங்கள் அவர்களை முன்னேற்றிக் கொண்டே முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள். ஏனெனில் மற்றவர்களை முன்னேற்றுபவர்கள் இயல்பாகவே முன்னால் இருக்கிறீர்கள். மற்றவர்களை முன்னேற்றுவதினால் உங்களுடைய புண்ணிய கணக்கு சேமிப்பாகிறது. எனவே முன்னால் தான் இருக்கிறீர்கள் அல்லவா. ஒவ்வொரு அடியிலும் முன்னேற வேண்டும் மற்றவர்களையும் முன்னேற்ற வேண்டும் என்ற இலட்சியத்தை சதா வைக்க வேண்டும். பாபா குழந்தைகளை வைத்தார், சுயம் முதுகெலும்பாக இருந்து, குழந்தைகளை முன்னேற்றினார். எனவே தந்தையை பின்பற்றுகிறீர்கள் அல்லவா. எந்தளவு பாபாவை பின்பற்றுகிறீர்களோ, அந்தளவு நம்பர்வார் உலகத்தின் இராஜ்ய சிம்மாசனத்திலும் நம்பர்வார் பின்பற்றுவார்கள். சிம்மாசனதாரி ஆவது, அல்லது சிம்மாசனத்தை பார்ப்பது, (அமர வேண்டும்) சத்யுகத்தில் 8 நபர்கள் அமருவார்கள், பிறகு என்ன செய்வார்கள்? சிறிதளவு சுவை பார்ப்பார்கள். விஷவ மகாராஜா தனது மாளிகை யில் வருகிறார்கள் என்றால் அதை நீங்கள் அமர்ந்து பார்ப்பீர்கள். பிறகு என்ன செய்வீர்கள்? எந்தளவு இந்த நேரத்தில் சதா பாபாவோடு சேர்ந்து உணவு உண்பது, நீர் அருந்துவது, விளையாடுவது, படித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அந்தளவு அங்கு கூடவே இருப்பீர்கள். எனவே பிரம்மா பாபாவிடம் மிகவும் அன்பு இருக்கிறதல்லவா. பிரம்மா பாபாவின் செல்லமான பிரம்மா குமார்கள் மற்றும் பிரம்மா குமாரிகளை பார்த்து பாப்தாதாவும் குஷி அடைகிறார். பிரம்மா பாபாவோடு பல பிறவிகள் நெருக்கத்தில் இருப்பீர்கள், கூடவே இருப்பீர்கள். 21 பிறவிகளுக்கு உத்திரவாதம் அளிக்கிறார். வித விதமான பெயர் ரூபத்தில் பிரம்மாவின் ஆத்மா வோடு தொடர்பில் வருகிறீர்கள். இதுபோன்று மனதில் வருவது அல்லது கேட்பது என்ற உணர்வு வருகிறது என்று சொல்கிறார்களா? எந்தளவு நெருக்கத்தின் நினைவு வருகிறதோ, அந்தளவு இயல்பான நஷா, நம்பிக்கை இயல்பானதாக இருக்கும். பலமுறை பாபாவின் துணையாக ஆகியிருக்கிறோம் என்று சதா மனதில் அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுதும் செய்கிறோம்

பலமுறை ஆகிறோம். குழந்தைகளின் அழிவற்ற முயற்சியை பார்த்து பாப்தாதா விற்கு விசேஷ குஷி ஏற்படுகிறது. எப்பொழுதும் தாய்-தந்தை மற்றும் குடும்பத்தினருக்கும் சிறிய குழந்தைகளின் மீது விசேஷமான அன்பு ஏற்படுகிறது, மேலும் அனைவரின் அன்பு தான் அவர்களை முன்னேற்றுகிறது. எந்தெந்த குழந்தை எந்தளவு முன்னேறிக் கொண்டேயிருக் கிறார்கள் மேலும் சேவை எவ்வளவு வளர்ச்சி செய்கிறார்கள்என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே நிரந்தரமாகவும் இயல்பான முயற்சியாளர்கள் என்ற வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். இந்த வருடம் இந்த வரதானத்தை நினைவில் வைத்து நினைவு சொரூபம் ஆக வேண்டும். ஒவ்வொருவரும் இந்த வரதானம் என்னுடையது என்று புரிந்துக் கொள்ளுங்கள். நல்லது.

அனைவரும் பிஸியாக இருக்கிறீர்கள் அல்லவா. யார் பிஸியாக இருக்கிறார்களோ, அவர்களிடம் மாயா வராது. ஏனெனில் உங்களிடம் அதை (மாயாவை) வரவேற்பதற்கான நேரம் இல்லை. அந்தளவு பிஸியாக இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது வரவேற்கிறீர்களா? ஏன் பிராமணர்கள் ஆனீர்கள்? பிஸியாக இருப்பதற்காக அல்லவா. பிஸியாக இருப்பவர்கள் தான் மிகப்பெரிய வியாபாரி என்று புன்முறுவலோடு பாப்தாதா சொல்கிறார், முழுநாளில் எவ்வளவு பெரிய வியாபாரம் செய்கிறீர்கள். கணக்கை தெரிந்துள்ளீர்களா? கணக்கு வைக்க வருகிறதா? ஒவ்வொரு அடியிலும் படிப்பிற்கான வருமானமாக இருக்கிறது. ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் - முழு கல்பத்தில் அப்படிப்பட்ட வியாபாரம் செய்ய முடியாது. எனவே எந்தளவு சேமிப்பாகிறதோ, அந்த சேமிப்பில் குஷி ஏற்படுகிறது. அனைவரையும் விட குஷி யாருக்கு இருக்கிறது? குஷியோடு சொல்லுங்கள் - நாங்கள் குஷியாக இல்லையென்றால் வேறு யாரால் இருக்க முடியும். இந்த நஷாவுடன் இருக்க வேண்டும், ஆனால் பணிவாகவும் இருக்க வேண்டும். நல்ல மரத்தின் அடையாளம் - பழம் செழிக்கக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் தலைவணங்கியிருக்கும் அப்படிப்பட்ட நஷா இருக்கிறதா? எனவே இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். உங்கள் அனைவரின் இது தான் இயல்பான வாழ்க்கை யாக இருக்கிறது. யாரை பார்த்தாலும் இது ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்ற நினைவோடு பார்க்க வேண்டும். ஆகையால் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய நஷாவாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு ஆத்மாவிற்காக இதயபூர்வமான அன்பு தானாகவே வெளிப்படும். ஒருபொழுதும் எவர் மீதும் வெறுப்புணர்வை கொண்டு வரமுடியாது. யாராவது எப்பொழுதாவது நிந்தனை செய்தாலும் கூட வெறுப்பு வர முடியாது, கேள்வி எழாது. கேள்விகள் வரும் இடத்தில் தான் குழப்பம் அவசியம் வருகிறது. முற்றுப்புள்ளி வைக்கக்கூடியவர்களால் தான் முழுமையாக தேர்ச்சி பெற முடியும். யாரிடம் சக்திகள் முழுமையாக நிரம்பியிருக்றதோ, அவர்கள்தான் முற்றுப்புள்ளி வைக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். நல்லது.

பாப்தாதா விடைபெறும் நேரத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் ஹோலியின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்.

ஹோலி (தூய்மையான) குழந்தைகளுக்கு சதா ஹோலியாக இருக்கிறது, எப்பொழுதும் ஞான யோகத்தின் வண்னம் பூசப்பட்டவர்களாக இருப்பார்கள், ஆகையால் வண்ணங்களை பூசிக் கொள்ள வேண்டுமென்ற அவசிய மில்லை.

இவர்கள் போட்டுக் கொள்வதுக் கூட இல்லை அல்லவா, வெளிநாட்டிலும் வண்ணங்கள் பூசிக்கொள்வ தில்லை. அவர்கள் எப்பொழுதும் குதுகலமாக தான் இருக்கிறார்கள். மற்றப்படி வண்ணத்தை பூசிக்கொண்டு மிக்கி மவுஸ் ஆக வேண்டாம். சதா ஹோலிஹன்ஸ் (தூய்மையான அன்னபறவையாக) இருக்கிறீர்கள். ஹோலி யாக இருக்கக்கூடியவர்கள் மற்றும் ஹோலியை கொண்டாடக்கூடியவர்களாக இருக்கிறீர்கள், மற்றவர்களையும் ஹோலி ஆக்குவதற்கான வண்ணத்தை (ஞானத்தை) தூவக் கூடியவர்கள். அனைத்து குழந்தைகளுக்கு ஹோலியின் வாழ்த்துக்கள். மேலும் ஊக்கம் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையில் பறக்கக்கூடியவர்களுக்கு வாழ்த்துக்கள். நல்லது.

வரதானம் : சாட்சிநிலை என்ற ஆடாத ஆசனத்தில் வீற்றிருக்கக்கூடிய ஆடாத அசையாதவர், இயற்கையை வென்றவர் ஆகுக.

இயற்கை குழப்பங்களை ஏற்படுத்தட்டும் அல்லது தனது அழகான விளையாட்டை காட்டட்டும். - இரண்டிலும் இயற்கையை வென்ற ஆத்மாக்களாகிய நீங்கள் சாட்சியாக இருந்து விளையாட்டை பார்ப்பீர்கள் (ரசிப்பீர்கள்). விளையாட்டை பார்க்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது, பயப்படுவதில்லை. யார் தபஸ்யாவின் மூலம் சாட்சி நிலை என்ற மனநிலையில் ஆடாத அசையாத இருக்கையில் வீற்றிருப்பதற்கான (அமருவதற்கான) பயிற்சி செய்கிறார் களோ, அவர்களுக்கு இயற்கையின் அல்லது மனிதர்களின் எந்தவொரு விஷயமும் அசைத்து விட முடியாது. இயற்கை மற்றும் மாயாவின் 5 - 5 பொம்மைகள் (விகாரங்கள்) தனது விளை யாட்டை விளையாடும். நீங்கள் அதை சாட்சியாக இருந்து பார்க்கும் பொழுது தான் ஆடாத அசையாத, இயற்கையை வென்ற ஆத்மா என்று சொல்லாம்.

சுலோகன்: மனம் - புத்தியை ஒரு பாபாவிடம் ஒருமுகப்படுத்தக்கூடியவர்கள் தான் பூஜைக்குரிய ஆத்மா ஆகிறார்கள்.